சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

**IA 2/2025 in IA.No. 282/2017 in OS.No. 26/2004**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 8ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. ராதா என்கிற ராதாபாய்<br>க /பெ. தனஞ்செயன் நாடார் | நாள் 08.07.2025 |
| வயது. 79 | தொழில் |
| கிராமம். புதுப்பேட்டை | வட்டம். |

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 18.02.2009 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எனக்கு எழுதி வைத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் இணையவழி நகல் ம.த.சா.ஆ.1. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

2) 1ம் பிரதிவாதி தன் முதல் மனைவி இறந்த பின்னர் என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் வள்ளியம்மாள். முதல் மனைவிக்கு வெங்கடேசன் மற்றும் ரமாதேவி ஆகியோர் பிள்ளைகள். வள்ளிதேவி என்னுடைய மகள். வழக்கு நிலுவையில் ம.த.சா–ஆ.1 எழுதப்பட்டது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1ல் 1ம் பிரதிவாதி தனக்குண்டான மூன்றில் ஒரு பங்கைதான் செட்டில்மென்ட் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு செட்டில்மென்ட் எழுதிய சொத்துகள் வழக்கு 9 முதல் 13 இன சொத்துக்கள் என்றால் சரிதான். புல எண்.

118/3ல் வீடு உள்ளது என்றால் அது சிதிலமடைந்துள்ளது. அதில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை. ம.த.சா.ஆ.1 படி எனக்கு வீடு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கை இழுத்தடிப்பதற்காக தவறான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் செட்டில்மென்ட் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. அதனை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை – இல்லை.